

LC
N23
223118

278

உ

# சர்வ தேள்கடி மருந்து



1 1 OCT 19…

பிர்ம்மானந்த அச்சுக்கூடம்,

திருவாதி.

1923.

உ

# தேள்கடி மருந்து.

## வைத்தியர் தேவையில்லை.

### தேள்

—○∽○—

விஷஜந்துக்களில் ஒன்றாகிய தேள் சிறிதாயினும் அது விளைவிக்கும் தொந்திரவு பெரிதென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். அது பல்வகைப்படும். அவை யாவையெனில்:—

1. சிறு தேள்.
2. பெருந்தேள்.
3. செந்தேள்.
4. கருந்தேள்.
5. வெண்தேள்.
6. சினைத்தேள்.
7. இலைத்தேள்.
8. பயிர்த்தேள்.
9. மலர்த்தேள்.
10. மலைத்தேள்.
11. இராஜதேள்.

22-3-18



எனப்பதினோர் வகைப்படும். இராஜ தேள் கொட்டினால் விஷந்தீராதென்றும், விதிமுடிந்தாலல்லாது அது நோராதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இராஜ தேளின் மகிமையையும் வலிமையையும் பின்வரும் வரிகளால் அறியலாம்:—

ஒரு பெரியவர் ஒரு நாள் ஒருமலையின் மேல் செல்லும்போது, அவர் கண்ணெட்டிய தூரத்தில் வெண்தேள் கூட்டமொன்று ஒரே அணியாகப்போவதைக்கண்டு நெருங்கிப் பார்க்குமிடத்து, ஏறக்குறைய நூறு தேள்கள் போவதையும், கடைசித்தேளின்மேல் ஓர் சிறிய இரத்த நிறமான தேள் சவாரி செய்வதையும் கண்டு, அவைகள் எங்கே போகின்றனவென்றறியும்படி சற்றுநேரம் பின்தொடர்ந்து, எதிர்ப்பட்ட ஒரு வளைக்குள்ளே முதலில் சென்ற தேள் புகக்கண்டு, அவர் ஓடி ஒரு பெருங்கல்லையெடுத்துவந்து அந்த வளையின்வாயில் வைத்தடைக்கவே, உட்சென்ற தேள்கள் போக மற்றவைகள் அக்கல்லைச்சுற்றி ஒன்றின்பின்னொன்றாய் நின்றுபோ

டின. உடனே அறையின் முன்னின்ற தேள் புறப்பட்டுக் கடைசி தேளிடம் சென்று சற்றுநேரம் சென்ற மாத்திரத்தில் இராஜ தேள் இறங்கி அத்தேளின்பின் சென்று கல்லிடம் வந்து, அக் கல்லைத் தன் கொடுக்கால் கொட்டிற்று. அந்த க்ஷணமே கல்லு துண்டுதுண்டாய் உடைந்து தெரித்துப் போயிற்று. இராஜ தேள் திரும்பித் தன் சவாரியின்மேலேறினது. பின் தேள்கள் ஒன்றின்பின்னொன்றாய் வளைக்குட்சென்றன.

## தேள் கொட்டுதல்.

தேள் கொட்டுவதினால் உண்டாகும் சங்கடத்தை அறியாதவர் ஒருவரும் இல்லை. பித்தத்திற்கும், தேள் விஷத்திற்கும், நேர் விரோதம். பித்த தேகிகளுக்குத் தேள் கொட்டினால் அவர்கள் படும் அவஸ்தை கடவுள்தான் அறிவார். அவர்கள் சில ஸமயங்களில் மூர்ச்சையாய் விழுந்துவிடுகிறார்கள். தேக பலத்திற்கும் விஷத்திற்



கும் ஸம்பந்தமில்லை. எவ்வளவு தடியர்களாயிருந்தாலும் பித்த தேகியாயிருந்தால் ஒருவன் தேளின் மகிமையால் கீழே விழுந்து புரண்டு அழவேண்டி இருக்கிறது. சிலர் தேள் கொட்டுதலை கட்டை எறும்பு கடித்தலுக்கு ஸமானமாக நினைக்கிறார்கள். அவர்கள் பாக்கியம் செய்தவர்கள்தான். சில தேஹங்களில் அவஸ்தை மாத்திரமல்ல; சாவும் நேரிடுகிறது. நெல்லூர் ஜில்லாவில் விஷத்தேள் என்ற ஒருவகைத்தேள் இனம் இருக்கிறது. அது கொட்டி ஒரு பெண்மணி இறந்துபோனாள். அந்தப் பெண் எச்சில் இடுவதற்காக சாணம் எடுக்கையில் விஷத் தேள் கையில் கொட்டவே வாந்தி எடுத்து மயக்கம் போட்டது. அரை மணிக்குள் ஜீவன் போய் விட்டது. தேள் கொட்டுதல் சகுனம் என்று பண்டிதர்கள் சொல்கிறார்கள். அனுபோகத்தில் அதை ஒப்புக்கொள்ளலாம். சுபகாரியங்களைத் தவிர அஸந்தர்ப்பங்கள் நேரிடுவதில்லை.

## தேள் நட்டுவாக்காளிக்கு சிகிச்சைகள்.

1. நாயுருவிப்பூண்டின் சமூலத்தைக் கசக்கித் தேய்க்கலாம்.

2. சுண்ணாம்பு, ஒட்டடை இவைகளை அரைத்துப் பூசலாம்.

3. சுண்ணாம்பையும், உப்பையும் சமனாய்ச் சேர்த்து அரைத்துப்பூசி அனலில் காட்டலாம்.

4. வெங்காயத்தைக் கொட்டின இடத்தில் ½-மணிநேரம் தேய்க்கலாம்.

5. பெருங்காயம் பூசலாம்.

6. தீக்குச்சி (Firematch)யை நீரில் சந்தனக்கல்லில் தேய்த்துக் கொட்டின விடத்தில் தடவின மாத்திரத்தில் வலி நீங்கும்.

7. புளித்த காடியினை கொட்டின விடத்தில் அடிக்கடி வைத்துத் தேய்க்க வலிபறந்து போம்.

8. கொட்டப்பட்டவர் திடீரென ஒருவருடனும் சொல்லாமல் நீர்நிறைந்த தடாகத்திலோ ஆற்றிலோ அமிழ்ந்து ஸ்னானஞ்செய்ய, வலி இருந்தவிடந் தெரியாமற் பறக்கும்.



9. தேள் கொட்டின விடத்திலே படிக்காரத்தை எலுமிச்சம் பழத்தின் ரசம் விட்டு அரைத்துப்போட்டு நெருப்பிற் காய்ச்சினால் தேள் விஷம் நீங்கும்.

10. மயிலிரகின் புகை நன்றாகப் படுமாறு செய்தாலும் மேற்படி விஷம் இரங்கும்.

11. வெள்ளைப்பூண்டை உரித்து அதனையரைத்துத் தேள் கொட்டின விடத்தில் போல்டீஸ் மாதிரி 10 அல்லது 20 நிமிஷங்கட்ட நோய் முற்றும் நீங்கும்.

12. கடித்த வாயில் புளியையும், அதனளவு சுண்ணாம்பையும் வெண்ணையாகக் குழைத்துப் போட்டால் ஐந்து நிமிஷத்தில் வலி நின்றுவிடுகிறது.

13. காஞ்சிரைவேர், அவுரிவேர், நாய்க்கொட்டான்வேர், பொன் முசுட்டைவேர் இவைகளை ஓர் நிறையாக பிடித்துச் சூரணஞ்செய்து திரிகடிப் பிரமாணம் இள வெந்நீரில் கொடுக்க தேள் நட்டுவாக்காலி விஷந்தீரும்.

14. புகையிலையில், மயிலிறகும்; வெள்ளெருக்கம்வேரும் வைத்துச் சுருட்டிப் புகை குடிக்க [illegible] விஷம் இறங்கும்.

15. நல்லெண்ணெயிற் குப்பைமேனி, தைவேளை, வெற்றிலை, இவைகளின் சாறும், உப்பும் போட்டு கொதிக்கவைத்து ஆவிபிடித்தாலும், நல்லெண்ணெயிற் கோழிக்காரத்தைப் போட்டு கொதிக்கவைத்து ஆவிபிடித்தாலும் கொட்டுவாய் கடுப்புத்தீரும்.

16. அரிதாரம், மனோசிலை, கெந்தகம், மாட்டுப்புறவின் எச்சம், கழற்சிப்பருப்பு, ஆடுதீண்டாப்பாளை இவைகளை ஓர் நிறையாய் வெள்ளெருக்கம்பால் விட்டரைத்து மாத்திரை செய்து [illegible] பாலினுரைத்துக்கடிவாயிற்பூசக் கடுப்பு எரிச்சல் தீரும், உத்தமமானது.

17. கொட்டின இடத்தில் சுண்ணாம்பு பூசி காயச்செய்து, வெடியுப்பு திராவகத்தில் ஒரு சொட்டு வைக்கவும்.



18. வாய்விளங்கம், இதை; ஐயித்தாவெண்ணெயில்(இந்த எண்ணெய் கடையில் அகப்படும்). உரைத்துத் தேள் கொட்டின வாயில்பூச உடனே குளிரும்.

19. திருநீற்றுப்பச்சை விரையை ஊறவைத்துச்சாப்பிடவும்.

20. மட்டிப்பால் புகை யூட்ட தேள் முதலிய விஷஜந்துக்களின் கொட்டுவிஷங்கள் தீரும்.

21. உப்பும், ஆளிவிரையும் அரைத்துப்பூசவும்.

22. வெள்ளைப்பாஷாணம் பலம் 1, காலாங் காய்ச்சல் வெடியுப்பு ¼ சேர் எருக்கம்பால் விட்டரைத்து பாஷாணத்துக் கவசமிட்டு மண்சீலை செய்து அவிபுடம் போடவும். உமிழ்நீர் அல்லது ஜலத்தை விட்டு மருந்தை இழைத்துக்கொட்டிய வாயில் தடவவும்.

23. கற்றாழைச்சோற்றை கடித்தவிடத்தில் தேய்த்து உள்ளுக்குங்கொடுக்கவும்.

24. நெய்ச்சட்டி இலையைக்கடிவாயில் தேய்க்கவும்.

25. நத்தச்சூரியிலையை உள்ளுக்குக் கொடுக்கவும்.

26. கொம்புத்தேனை கடிவாயில் தடவவும்.

27. வெண்குன்றிவேரை வெந்நீரிலுரைத்துப்பஞ்சிலூட்டி இடத்தில் கொட்டினால் வலது மூக்கிலும், வலத்தில் கொட்டினால் இடது மூக்கிலும் நசியம்பிழியவும்.

28. குப்பைமேனியும் உப்புக்கல்லும் சேர்த்து கசக்கி கொட்டினபாகத்துக்கு மறுபாகத்தில் செவியில் பிழியவும்.

29. குழாய்கர்தகத்தை சுத்த ஜலத்தில் உறைத்துப் போடவும்.

30. சுக்கை எருமைப்பாலிலும் எருக்கம்பாலிலும்அரைத்துக் கடிவாயில் தடவவும்.

31. குப்பைமேனியும் வெடியுப்பும் கலந்து அரைத்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சிக் கடிவாயில் தடவிக் கட்டிவைக்கவும்.



32. வெள்ளை எருக்கம்வேரைத் தண்ணீரில் அரைத்துக் கடிவாயில் தடவினால் தப்பாமல் தீரும்

33. வெள்ளை எருக்கம்வேர், வாணமருந்து சமனிடை கூட்டி எருக்கம்பாலில் அரைத்து மாத்திரை செய்து வைத்துக்கொண்டு கடிவாயில் அல்லது வெந்நீரில் உரைத்துத்தடவினால் சீக்கிரத்தில் அனுகூலமாகும்.

34. வெள்ளைக்காகணம் வேரை, ஞாயிற்றுக்கிழமைதினம் எடுத்துவைத்துக்கொண்டு ஜலத்தில் அரைத்துத் தடவினால் அனுகூலமாகும்.

35. பெருமருந்துக்கொடிவேரை ஜலத்தில் அரைத்துத்தடவினால் அனுகூலப்படும் (கைகண்டது).

36. கரு ஊமத்தை வேரை ஜலத்தில் அரைத்துத் தடவினால் அனுகூலமாகும்.

37. இலுப்பமரப் பட்டையைக் கொஞ்சம் வெற்றிலையில் வைத்துச்சாப்பிட்டால் அனுகூலமாகும்.

223118

38. பாரிஜாத இலை மூன்று சாப்பிட்டால் தீரும்.

39. அருகம்பில்லு இடித்துக்கசக்கித் தேள் கொட்டின பக்கத்துக்கு எதிர்ப்பக்கத்தின் மூக்கில் பிழிந்தால் தீரும் (கைகண்டது).

40. கிலக்கடம்பை வேர் அருகாமல் நீளமாக எடுத்துத் தூபதீபம் காட்டி வைத்துக்கொண்டு கொட்டின இடத்தில் தடவத்தீரும்.

41. முத்தியிருக்கும் செவிவேளை மேல் சொன்னதுபோல் செய்தால் விஷம் தீரும்.

42. திங்கட்கிழமை காலையில் சுத்தமாய்ச் சிறு காஞ்சொறிவேரை அறுபடாமல் எடுத்து வைத்துக்கொண்டு தடவினால் கொட்டுவாய்விஷம் தீரும்.

43. ஆடுதீண்டாப்பாளைவேர் நீர்முள்ளிவேர் சமனாய் எருக்கம்பாலில் அரைத்து மாத்திரை செய்துவைத்துக்கொண்டு எருக்கம்பாலில் அரைத்துத்தடவினால் அனுகூலமானது (கைகண்டது)

44. வெள்ளாரிவேரைத்தண்ணீரில் இழைத்துக் கொட்டுவாயில் தடவினால் அனுகூலமாகும்.



45. தண்ணீரில் முழுகுகிற கழச்சிக்காயை விரையைப்போக்கி அதில் கெட்டியான மிளகு செலுத்தி வாயை அடைத்துத்தேள் கடித்தவருக்கு நெறியேறினவிடத்திலிருந்து கீழேயிறக்கி பிறகு அந்தக்கழச்சிக்காயை மற்றொருவன் கையில் கொடுத்தால் அவனுக்கு ஏறும், பிறகு தண்ணீரில் போட்டால் விஷம்போம்.

46. மருக்கொழுந்து, தீக்குச்சி முதலியவற்றை அரைத்துப்போடவும்.

47. தேள் கொட்டுண்டவனுக்குக் கற்பூர வாசனையைப்பிடிக்கச்செய்தால் உபாதி ஒருவாறு ஒழிந்துவிடும்.

48. காடியிலாவது அல்லது உப்பும் தண்ணீரும் கலந்த ஜலத்திலாவது நீளமாகக்கிழித்த துணியை நனைத்துக் கொட்டுவாயின்மேல் போட்டுவைக்கின் வலிசற்று இலகுவாயிருக்கும்.

49. நீர்வாளப்பருப்பிலுள்ள முளையை எடு

த்து அதை 8 வெள்ளெருக்கம்பாலில் ஊறப்போட்டு எடுத்து அரைத்து உருண்டைசெய்து நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு வெற்றிலைச்சாற்றிலாவது முலைப்பாலிலாவது உரைத்துக்கடிவாயிற்போடவும்.

50. "மாக்னெடோ எலக்டிரிக் பாட்டரி" என்னும் நரம்புகளை நேர்செய்யும் கருவியை உபயோகித்தால் சற்று நோவு மிதப்படும். அதன் பிறகு "கோகேன்ஹைட்ரோ க்ளோரெட்" என்னும் திராவகத்தில் நல்லதண்ணீர் 10, அல்லது 15 துளிகள் விட்டுக்கடித்தவிடத்தில் தடவினால் அவ்விஷத்தைக்கேட்கும்.

51. தேள் கொட்டினவுடன் அந்த இடத்திற்குமேல் ஒரு கட்டுப்போடுவது நல்லது. விஷம் மேலே எறாது. கடுப்பு கொட்டுவாயிலே தான் இருக்கும். மருந்துகொண்டுவர கொஞ்சம் தாமஸம் ஆனாலும் பாதகம் இல்லை.

52. தேள் கொட்டின உடனே இரண்டுதேயிலைக்கரண்டி உப்பை நாலு வெற்றிலையில் மடி



த்து வாயில்போட்டு நறநறவென்று கடித்து விழுங்கிவிடவேண்டும். பத்து நிமிஷத்துக்குள் வலி போய்விடும். அப்படிப்போகாவிட்டால் மறுபடியும் ஒரு டோஸ் சாப்பிடல் வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் சாப்பிடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது.

53. தேள் கொட்டினதற்கும் கடித்ததற்கும் வசம்புத்தூளை வெற்றிலைச்சாற்றுடன் சேர்த்து அரைத்து முப்பது நிமிஷத்திற்கு ஒருதரம் பூசினால் வலியிராது.

54. தேள் கொட்டினதும் ஒரு முழுப்புளியங்கொட்டை ஒன்றை தரையில் சூடுவரும்படியாகத்தேய்த்து, தேள் கொட்டின வாயில் வைத்தால் உடனே சுகமடையலாம்.

55. பனங்கட்டியை தண்ணீர் கலந்து பூசினாலும் விஷம் இறங்கிவிடுமாம்.

56. தேள் கொட்டின தக்ஷணமே விஷம் மேலுக்கு எறாமல் ஒரு கட்டுப்போட்டு புதிய

சுண்ணாம்பையும் உப்பையும் கலந்து நன்றாக அரைத்து, கொட்டிய வாயில் ஆறிண்டாகும்படி பத்து நிமிஷம் தேய்த்து சுண்ணாம்பையே கனமாக தடவி விட்டு, குளிர்ந்த காற்று வீசுமிடத்தில் உலாவிக்கொண்டிருந்தால், ஜுரம், காயக்காய விஷம் இறங்கிவிடும்.

57. மூஞ்சூறின் ரத்தத்தை நன்றாய் காயவைத்து பஸ்பமாக்கி வைத்துக் கொண்டால் கடித்த காயத்தில் அப்பஸ்பத்தைத் தண்ணீர்விட்டுப் பிசைந்துபூச உடனே குணமாகும்.

58. எவ்வித நஞ்சையும் அடுப்புக்கரி முறித்துவிடும். அடுப்புக்கரியை அரைத்து உண்டால் போதும். வயிற்றில் குத்தும் குன்மதிற்கும் இது நல்லதாம்.

59. சிறியாநங்கையை வேருடன் பிடுங்கி வந்து நிழலில் உலர்த்தி கல்வத்திலிட்டு வஸ்திரகாயம் செய்து ஒருடப்பியில் வைத்துக்கொண்டால் பாம்பு, தேள், எலி, பூரான், ஜலமண்டலம் நாய், பூனை, இன்னும் இப்பூமியின்கண் இருக்கப்



பட்ட விஷஜந்துக்கள் யாரைக்கடித்தபோதிலும் அவர்களுக்கு மனமிறங்கி இரண்டு கைகளையும், இரண்டு கால்களையும், நன்றாய் உதரச்சொல்லி, பிற்பாடு மேற்படி வஸ்திரகாயத்தில் ஒரு சிட்டிகை எடுத்து ஓம் சிவாயென்று மூன்றுதரம் மனதில் சொல்லிக்கொண்டு அவர்கள் வாயில் போட்டு ஒரு முடக்குத் தண்ணீரை வார்த்து விழுங்கச் சொல்லிப் பின்பு இல்லத்திற்கு அனுப்பவும். மேற்படி விஷம் 5-நிமிஷத்தில் இறங்கிச் சுகமடைவான்.

### தேள் கொட்டி மாரடைத்தால்

இலந்தை இலை 10, புளியங்கொட்டையளவு சிற்றரத்தை, 4 மிளகு இவைகளை வாயில்போட்டு மைய மென்று தேள் கடித்தது வலது பக்கமானால் இடது பக்கத்துச்செவியிலும், இடதுபக்கமானால் வலதுபக்கத்துச் செவியிலும் அடிக்கடி பலத்து ஊதவும்.

### தட்டுவாக்காளி கடிக்கு.

1. கடித்தவுடன் சுண்ணாம்பும் உப்பும் சே

நீர்த்தரைத்துக்கடிவாயில் தடவ விஷம் தீரும்.

2. எட்டிவேர்ப்பட்டையை நெல்லிக்காயளவு அரைத்து அழாக்கு வெந்நீரில் கரைத்து உள்ளுக்குக் கொடுத்து கடிவாயில் கத்தரிக்காயை சுட்டுக்கட்டவும்.

3. இலந்தைக் கொழுந்தை நன்றாய் மென்று கடித்த பாகத்தின் மறுபாகத்துச் செவியின் ஒரு நிமிஷத்துக்கு ஒருதடவை பொறுத்துப்பொறுத்து ஊதினால் குணம்.

4. தேள், நட்டுவாக்காளி விஷத்துக்குப் பாவட்டைவேர் ஜலத்தில் அரைத்துக் கடிவாயில் தடவி நெருப்பில் காய்ச்சினால் 30-நிமிஷத்தில் இறங்கும். கடுமையாயிருந்தால் 5, 6 ஆடுதீண்டாப்பாளை இலையைச்சாப்பிட்டால் இறங்கும்.

## தேள், நட்டுவாக்காளி, தேனீ, குளவி முதலியவை கொட்டியதற்கு

பொறுக்கக்கூடிய வெந்நீரை வார்த்து அதில் சோங்கை உப்பைப்போட்டு அதனுள் கொட்டின

22 3 18



பாகத்தைச் சற்றுநேரம் வைத்தி[illegible] லது அந்த நீரை எடுத்துவிட்டுக்கொ[illegible] வும்.

## ஜலமண்டலி, ரத்தமண்டலிகடிக்கு.

ஜலமண்டலி தீண்டினால் மாரடைக்கும், வியர்வை விடும், ஜன்னி குறிகாணும். இரத்தமண்டலி தீண்டினால் மயிர்க்கால்களில் உதிரம் கசியும், ஜன்னி தோன்றும். இதற்கு அருகம்புல்லுவேர் ஒருபிடிமென்று ரஸத்தை விழுங்க சுகமுண்டாகும்.

## இரத்தமண்டலி விஷத்துக்கு.

ஆனைவணங்கி இலையை எலுமிச்சங்காயளவு அரைத்து சுத்தஜலத்தில் கரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

காடன் பருத்தி யிலைச்சாறு சாப்பிடவும்.

முற்றிற்று.

3 விளம்பரம்.

இப்புத்தகம் திருவாரூர் சென்ட்ரல் ஹைஸ்கூல் மானேஜர் மகா-ள-ள-ஸ்ரீ T. S. ஸ்ரீனிவாஸராவ் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி கறுஜூடலன் பத்திராதிபர் திருவாளர் T. V. கிருஷ்ணதாஸ் அவர்களால் இயற்றப்பட்டது.

9 OCT 23